இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 05
இரண்டாம் மதிப்பீட்டு பரீட்சை – 2007/2008
LWU 3312 – காணிச்சட்டம்
காலம்: 40 நிமிடம்

திகதி: 13.12.2007 நேரம்: மு.ப. 11.30 – பி.ப 12.10

ஒரு வினாவுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. 1992ஆம் ஆண்டு மல்வத்தையின் சொந்தக்காரரான பியால் என்பவர், புஞ்சா என்பவ குறித்த நிலத்தில் கவனமெடுப்போனாக (Caretaker) நியமித்ததுடன் குடும்பத்துடன் அவ அந்நிலத்தில் வந்து குடியேறுமாறு கோட்டுக்கொண்டார். புஞ்சா கடினமாக உழைத்து குறித் நிலத்தில் பழ மரங்களையும் காய்கறிகளையும் விவசாயம்செய்தார். பியால் ஒரு மாதத்திற் ஒரு முறை மல்வத்தைக்கு வந்து காய்கறிகளையும் பழங்களையும் வீட்டிற் எடுத்துச்செல்வார். 1993ஆம் ஆண்டின் ஓர் தினத்தில் பியால் குறித்த நிலத்திற்கு செல்லு போது புஞ்சா அதனை எதிர்த்ததுடன் பியால் குறித்த நிலத்திற்குள் உட்புகுவதை அனுமதிக்கவில்லை. அத்துடன் புஞ்சா விளைச்சல்களை பியாலுக்கு வழங்க மறுத்தா பிறகு பஞ்சா குறித்த நிலத்தில் ஓர் வீட்டினை அமைத்தார். சில மாதங்களுக்கு பிற பியால் தனது நண்பர்களின் உதவியுடன் புஞ்சாவினையும் அவரது குடும்பத்தினரையு மல்வத்தையில் இருந்து விரட்டிய போதிலும் 3 கிழமைகளுக்குள் புஞ்சா குறித்த நிலத்திற் மீண்டும் வந்ததுடன் குறித்த நிலத்தினை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.

2001ஆம் ஆண்டு சமில எனும் 14 வயது நிரம்பிய தமது மகனை மல்வத்தையின் ஒ வழியுரிமையாளராக விட்டு இறந்தார். 2003ஆம் ஆண்டில் புஞ்சா இறந்தார். அவரது 2 வயது மகன் சிறீ பியாலின் சகோரதரர்களின் வெளியகற்றல் முயற்சிகளுக்கு மத்தியிலு தனது தாயுடன் தொடர்ந்து அந்நிலத்தில் வசித்து வந்தான்.

2006ஆம் ஆண்டு சமில மல்வத்தையின் மீது ஓர் பிரகடனப்படுத்தல் வழக்கினை (Declaratory action) தாக்கல் செய்தார். சிறி ஆட்சியுரிமை மூலம் நிலத்தின் சொந்தத்தினை கோருகின்றார்.

சிறீக்கு ஆலோசனை வழங்குக.

2. ஓர் உடமை வழக்கிலுள்ள உடமை தன்மையின் தேவைப்பாடு இறுக்கமான 'குடியியல் உடமை' (*civilis possessio*) இல் இருந்து மிகவும் நெகழ்ச்சியான அணுகுமுறையை நோக்கிய இலங்கை நீதிமன்றங்களின் அணுகுமுறை நகர்வினை ஆராய்க. தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நியாயாதிக்கங்களிலும் இருந்து தரப்பட்ட இயைபுடைய தீர்ப்புச்சட்டங்களுடன் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(பதிப்புரிமை பெற்றது)